[1973 நவம்பர் 24

புஷ்பவனேஸ்வரர் கோயில் தேர்

*** 388 வின—திரு. த. சோனையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம், சிவகெங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட புஷ்பவனேஸ்வரர் பவனி வருகிற தேர் பழுதுபட்டு இருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, திருப்புவனம் புஷ்பவனேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான தேர் சிவகெங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்டது. சென்ற ஆண்டு அந்தத் தேர் இழுக்கப்பட்டபொழுது மக்கள் எல்லாம் அச்சத்தோடுதான் இழுத்தார்கள். பொதுமக்கள் பயந்துகொண்டே அந்தத் தேரை இழுக்கிருர்கள். ஆகவே பொதுமக்களின் பயத்தைப் போக்குவதற்காக சர்க்கார் அந்தத் தேரை ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்தக் கோயில் சிவகெங்கை சமஸ்தானத்தின் பாம்பரை அறங்காவலருடைய ஆளுகைக்கு உட்பட்டது ஆகும். ஆகவே அதையெல்லாம் அவர்கள் தான் மேற்கொள்ளவேண்டும். மதுரை துணை ஆணையர் உடனடியாக அந்தத் தேரை பழுதுபார்க்கவேண்டும் என்றும் பழுது பார்த்துத்தான் ஓட்டவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரை வழங்கியிருக்கிருர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழகத்திலே எத்தனை கோயில்களிலே தேர்கள் இருக்கின்றன? எத்தனை தேர்கள் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன என்ற கணக்கு வழக்கு ஏதாவது இருக்கிறதா? அவைகளை ஏலம் போட்டு விற்றுவிடாமல் அவைகளைப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஏதாவது அரசாங்கத்திடம் உண்டா? அந்தத் தேரிலே உள்ள பழைய காலச் சிற்பங்களையெல்லாம் பாதுகாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறதா?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எத்தனை தேர்கள் என்ற கணக்கு என்னிடத்திலே இல்லை. ஏலம் போடுவது என்ற பிரச்னைக்கே இடம் இல்லாத வகையில் அறநிலையத்துறை ஆணையர் தேர்களிலே உள்ள சிற்பங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் பாதுகாக்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[முற்பகல் 10-00]

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. ராயப்பா வழக்கில் உச்ச நீதிமன்றம் தமது தீர்ப்பில் சுட்டிக் காட்டியபடி கூவம் விவகாரத்தின் மீது விசாரணை நடத்தத் தவறியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய உரிமைப்பிரச்னையின்மீது இன்றையதினம் தீர்ப்பளிப்பதாகக் கூறியிருந்தேன். அதை திங்கட்கிழமையன்று அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும்

Failure to refer the Cooum affairs to a proper authority as directed by Vigilance and pointed out by the Supreme Court in Royappa case. என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது, எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தகுந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர்வர்களே, இந்த ராயப்பா கேஸ் தமிழ்நாட்டிலே மட்டுமல்லாமல் பொதுவாக இந்தியாவிலே பலரும் எதிர்பார்த்த முக்கியமான கேஸாக இருந்தது. இந்த கேசினுடைய முடிவு நேற்று வெளிவந்து பத்திரிகையிலே சில